ஆசிரியரும் மாணவியும்

கலைஞர்
சுபா. ஜெயராமன்

ஆசிரியரும் உளவியலும்

கலாநிதி சபா. ஜெயராசா

அம்மா வெளியீடு
இணுவில் - மருதனுமடம்

TITLE : ASIRIYARUM ULAVIYALUM
AUTHOR : DR. S. JAYARASAH, M. A. (Ed.), Ph. D.
ADDRESS : DEPT. OF EDUCATION,
UNIVERSITY OF JAFFNA.
EDITION : FIRST 1990
COPYRIGHT : AUTHOR
PRINTER & PUBLISHER : AMMA, INUVIL - MARUTHANAMADAM
SUBJECT : TEACHER & PSYCHOLOGY
PRICE : Rs. 20-00
COVER DESIGN : RAMANI

சமர்ப்பணம்

இலங்கை வங்கி முன்னாள் உத்தியோகத்தரும்
எமது அன்புக்குரியவரும் ஆகிய
அமரர் செ. அரியரத்தினம் அவர்கட்கு
இந்நூல் சமர்ப்பணம்.

ஆசிரியரும் உளவியலும்

உளவியலும் கல்வியும் மிகப் பரந்த ஆய்வுத் துறைகளாக விளங்குகின்றன. தேடலும், மெய்ப் பொருளைக் கண்டறியும் தேவையும் தொடர் கின்றன. மிக இளமை நிலையிலுள்ள உளவியல் ஆய்வுகளை அடியொற்றி மிகவும் பாரிய சமூக முடிவுகளை எடுக்க முடியுமா என்ற கேள்விகளும் அவ்வப்போது எழுப்பப் படுகின்றன. வேகமாகப் பெருக்கெடுக்கும் அறிவு, மிகவும் சிக்கலடைந்து செல்லும் சமூகம், என்பவற்றின் மத்தியிற் கற்றலையும், கற்பித்தலையும் எளிமைப் படுத்தவும் வினைத்திறன் படுத்தவும் கல்வி உளவியலறிவு இயக்க பூர்வமான துணையாகி வருதலை மறுக்க முடியாது.

கல்வி வளர்ச்சிச் செயல் முறையின் அச் சாணியாகவும் உள்ளார்ந்த தொடர்புடையவ ராகவும் ஆசிரியர் கருதப்படுகின்றார். கல்வி வளர்ச்சிக்குத் துணைசெய்யும் அனைத்து ஆற்றல் களையும் தொடர்புகளையும் வரன் முறையாக

ஆராயும் இயலாக உளவியல் விளங்குகின்றமை யாற் கல்வி உளவியல் இன்றி ஆசிரியத்துவம் முழுமையடைய மாட்டாது.

கல்வியின் வரையறை இன்று மிகவும் விரிவு பெற்றுச் செல்கின்றது. கல்வி என்பது ஒரு சில பாடங்களுடன் மட்டும் கட்டுப்பட்டிருந்த வரை யறை உடைந்துவிட்டது. மனிதனதும் சமூகத் தினதும் முழு வளர்ச்சிக்குமான, என்றுமே விட்டகல முடியாத தொடர்சாதனம் கல்வி என்று உணரப்படுகிறது. இந்த முழு நிறைவான செயற்பாட்டில் எவ்வகையிலும் அந்நியப்படாது நிற்கும் ஆற்றலைக் கல்வி உளவியல் வழங்கு கின்றது.

ஆசிரியர் மாணவருடன் இடைவினை கொள்கின்றார். இந்நிலையிற் கற்பிக்கும் பாடம் பற்றிய அறிவு, கற்கும் மாணவன் பற்றிய அறிவு, அவன் வாழும் சமூகத்தின் யதார்த் தங்கள் என்பவற்றை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டுமென்பதைக் கல்வி உளவியல் வற்புறுத்து கின்றது. கல்வி உளவியலும் குழந்தை உள வியலும் உளவியலின் ஒன்றிணைந்த கூறுகள்.

குழந்தையின் இயல்புகள் :

குழந்தையின் இயல்பு, உடல், உள்ளம், மனவெழுச்சி ஆகியவற்றின் விருத்தி, சமூக இசைவாக்கம், உளமொழி இயல், அழகுணர்

திறன், கவர்ச்சிகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்தம் மனநலம் என்பவற்றை ஆசிரியர் அறிந்திருக்கும் பொழுது சிறுரை அறிவுடன் சங்கமிக்கச் செய்யும் பணி வெகு எளிதாகி விடுகின்றது.

குழந்தைகளுக்குரிய கல்வி அவர்களின் உடலியக்க நடத்தைகளைத் தழுவிச் செல்ல வேண்டியுள்ளது. குழந்தையின் மனநலம், சமூக இசைவாக்கம் என்பவை உடலியக்கங்களுடன் இடையறாத தொடர்பு கொண்டிருக்கும். குழந்தை நிலையில் 500 தசைநார் வரை அவர்களிடத்துக் காணப்படுமாயினும், முதிர்ச்சி, பயிற்சி, சூழலுடன் கொள்ளும் இடைவினைகள் என்பவற்றின் வாயிலாகவே உடலியக்க விருத்தியை மேம்படுத்த முடியும்.

உடலியக்க முதிர்ச்சியும் கல்வியும் குழந்தை நிலையில் ஒருங்கிணைக்கப்படல் வேண்டும். உடலில் உள்ள பல்வேறு தசைநார்களையும் கட்டுப்படுத்தி, குறிப்பிட்ட செயலுக்காக இயக்கிச் செல்லும் திறன் உடலியக்க முதிர்ச்சி என்று கொள்ளப் படும். மாறுபட்ட தசை நார்களின் ஒடுக்கத்திற்கும், விரிவுக்கும் இடையில் ஏற்படுகின்ற சமநிலைசார்ந்த செயற்பாடே தசைநார்களின் கட்டுப்பாடு என்று கொள்ளப்படும். குழந்தைக் கல்வி தசைநார்களை வலிமைப்படுத்துவதுடனும், குறிப்பிட்ட நோக்கில் இயங்குவதுடனும் இணைந்து செல்லல் வேண்டும். உணவருந்தல்,

நடத்தல், இருத்தல், ஓடல், பாடல், விளையாடல் என்ற அடிப்படைப் பயிற்சிகளில் இருந்து எழுதுதல், திட்டமிட்ட வரைபுகளை மேற்கொள்ளல் போன்ற நுண்ணிய அனுபவங்களை ஏற்படுத்தல் வேண்டும்.

கண் அசைவுகளிலே நுண்ணிய தசை நார்களின் கட்டுப்பாடு புலப்படும். குழந்தை நிலையிற் செயல்கள் அனைத்தோடும் கண் தொடர்ந்து செல்லும். எழுதல், வரைதல், என்பவை கண் - கை ஒருமைப்பாட்டுடன் இணைந்த உடலியக்கச் செயல்கள். ஒலிக்கேற்ப நடத்தல் என்பது செவிப்புலன் கால்களுடன் இணைந்த உடலியக்கச் செயலாகும்.

குழந்தை உளவியல் ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட பல முடிவுகள் ஆசிரியர்களுக்குப் பெரிதும் உறுதுணையாகவுள்ளன. குறிப்பிட்ட செயலைச் செய்வதற்குரிய முதிர்ச்சி அடைய முன்னரே அதனை நிறைவேற்றுதற்குரிய பயிற்சியை வழங்குதல் பயனற்றதாகக் கருதப்படுகின்றது. முதிர்ச்சி அடைய முன்னர் வழங்கும் பயிற்சி குழந்தைக்கு நெருக்கடியையும், சோர்வையும் ஏற்படுத்தும். அவ்வாறே உரிய முதிர்ச்சி பெறுங் காலத்தில் உரிய அநுபவங்களை வழங்காது விடுதலும், குழந்தையின் முன்னேற்றத்தைப் பின்னடையச் செய்து விடுகின்றது. எமது சமூக பொருளாதாரச் சூழலில் குழந்தைகளின் முதிர்ச்சிக்கும் பயிற்சிக்குமுள்ள தொடர்புகள்

ஆராயப்பட்டு ஆசிரியர்களுக்கு ஒரு விரிவான பட்டியல் தரப்பட வேண்டியுள்ளது. மேலை நாடுகளில் ஆசிரியர்களுக்குக் கிடைத்துள்ள இந்த உளவியல் அனுகூலம் எமது ஆசிரியர்களுக்கு இன்னமும் கிடைக்கவில்லை.

குழந்தைக் கல்வியானது மனவெழுச்சி முதிர்ச்சியுடன் இணைந்து செல்லவேண்டும். உடலும் உள்ளமும் கிளர்ந்தெழும் நிலை மனவெழுச்சி என்று கொள்ளப்படும். கோபம், பயம், மகிழ்ச்சி போன்ற மனவெழுச்சிகள் குழந்தைகளின் கல்வியைப் பாதிக்கும். மனவெழுச்சியின் போது பெருமளவு வலு உடலிலிருந்து வெளிவிடப்படுகின்றது. உடலின் துரித செயல்களுக்காகத் திரட்டப்படும் வலு யாதாயினும் ஒரு வழியில் வெளியேற்றப்பட வேண்டியுள்ளது. இவ்வாறான வலு வெளியேற்றம் அழிவு வழியிலே செல்லாது ஆக்க வழியிலே திசை திருப்ப ஆசிரியர் முயலவேண்டும். குழந்தைகளின் மனவெழுச்சிகள் குறுகிய கால வீச்சைக் கொண்டிருக்கும். திடீரெனத் தோன்றி மறையும் ஒரு சிறு புயலாக அவை காணப்படும். கோபம் எழும் பொழுது அவற்றை அடக்கும்படி ஆசிரியர் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் பொழுது கோபத்துக்குரிய காரணத்தை அறியாதிருப்பின் அணுகுமுறை தவறாகிவிடும். குழந்தைகளிடத்து நியாயபூர்வமான கோபம் எழும்பொழுது ஆசிரியர் அதனை ஏற்றல் வேண்டும். அத்தகைய கோபங்

களுக்குத் தண்டனை வழங்குதலும், கண்டித்தலும், குழந்தையிடத்து உள நெருக்குவாரங்களை ஏற்படுத்தும்.

மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தும் முறைகளை குழந்தைகளிடத்துப் புரிந்துணரச் செய்யுமிடத்து அவர்களின் முதிர்ச்சியையும் பொருளாதார சமூகச் சூழலையும் கருத்திற் கொள்ளுதல் நன்று. தனக்கு மகிழ்ச்சி தரும் குழுவில் தான் ஓர் உறுப்பினராக இருக்க விரும்பும் பொழுது மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற உணர்வு ஏற்படத் தொடங்கும். ஆசிரியரின் அங்கீகாரத்தைப் பெற, நண்பர்களின் அன்பைப் பெற, மனவெழுச்சிக் கட்டுப்பாடு இன்றியமையாத தென்ற உணர்வு வளர்க்கப்படல் வேண்டும்.

''மனவெழுச்சியோடிணைந்த கற்றல்'' என்ற கோட்பாடும் உளவியலில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மகிழ்ச்சி, அன்பு, வியப்பு என்ற மனவெழுச்சிகளோடு இணைந்த கற்பித்தல் அதிக வினைத்திறன் கொண்டிருக்கும் என்பதை ஆய்வுகள் நிலைநிறுத்தியுள்ளன.

ஓரளவு பயம் உண்டாகும் சூழ்நிலையிற் குழந்தைகள் பிறருக்கு உதவி செய்வதும், எச்சரிக்கையாய் இருத்தலும், பிறரின் உதவியை நாடுதலும் கண்டறியப் பட்டுள்ளன. கட்டுப்படுத்தக் கூடியளவு பயத்தை ஏற்படுத்துதலும் கல்வியில் நாட்டத்தை உண்டாக்கும். ஆனால்

பயத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் குழந்தைகளை அடிபணிய வைப்பதும், நடத்தை களைச் சீர்திருத்த முயலுதலும் ஆபத்தான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை ஆசிரியர் அறிந்திருத்தல் வேண்டும். பரீட்சை களுடன் அந்த பயம் இணைக்கப்படுமாயின் சிறுவர்களின் முன்னேற்றத்தை அது பாதிக்கும். பரீட்சைகளை எதிர்கொண்டு வெற்றி பெறச் செயல் பரீட்சைப் பயத்தை ஒழிப்பதற்கான நேர் உபாயமாகும்.

குழந்தைகளுக்கான கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் உளவியலுக்கும் மொழி இயலுக்கு முரிய தொடர்புகளைப் புரிந்து கொள்ளல் விரும்பத்தக்கது. மொழி வளர்ச்சி கல்வி முன் னேற்றத்துக்கும், சமூகத் தொடர்புகளுக்கும் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. தேவை களும், சமூக ஊடாட்டங்களும், புதிய புதிய அனுபவங்களும் குழந்தைகளின் மொழித்திறனை வளர்க்கின்றன. நிபந்தனைப் படுத்தும் துலங்கல் வரை பேச்சுத் திறனும் வளரும். புத்தகம் என்ற பொருளைப், ''புத்தகம்'' என்ற செயல்லுடன் இணைத்தல் நிபந்தனைப் படுத்தலுக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்.

பேச்சுத் திறன் வளர்ச்சிக்குப் பின்பற்றல் அல்லது கண்டு பாவனை செய்தல் துணை நிற்கும். பிறர் பேசுவதைக் கேட்டுத் தாமும் பேச முயல்வது மனித இயல்பு. ஆசிரியர் பயன்

படுத்தும் மொழி அறிந்தோ அறியாமலோ மாணவர்களாற் பின்பற்றப் படுவதால், திட்ப நுட்பமாகவும், பிரக்ஞை பூர்வமாகவும் மொழியைப் பயன்படுத்துதல் வேண்டும்.

குழந்தைகளின் பேச்சு மொழியில் முன்னேற்றமில்லாத ''சம தளங்கள்'' அவ்வப்போது ஏற்படுகின்றன என்று உளவியலாளர் கூறும் கருத்து ஏற்புடையதன்று. புதிய புதிய அனுபவங்களையும் இடைவினைகளையும் தொடர்ச்சியாக ஏற்படுத்தக் கூடிய ஓர் ஒழுங்கமைப்பில் மொழி வளர்ச்சி ஏற்படாத சமதளம் அல்லது தேக்கம் ஏற்பட முடியாது.

பேசுவதிலும் பார்க்க புரிந்து கொள்ளவே முதலில் வேகமாகக் கற்றுக் கொள்ளப்படுகின்றது. பேச்சுத்திறன் சொற்களஞ்சிய அமைப்போடு இணைந்து செல்லும். சொற்களஞ்சியத்தைப் பொது நிலையென்றும் சிறப்பு நிலையென்றும் இரண்டாகப் பாகுபடுத்தலாம். நாளாந்த வாழ்வுடனும் அனுபவங்களுடனும் இணைந்த சொற்களைச் சிறுவர் விரைந்து கற்கின்றனர். இவை பொதுச் சொற்களஞ்சியத்தில் இடம்பெறுகின்றன. பாடங்களில் இடம்பெறும் கலைச் சொற்கள், இரகசிய மொழி, என்பவை சிறப்புச் சொற்களஞ்சியத்தில் இடம்பெறும்.

சிறுவர்களின் இரகசிய மொழி அவர்களின் உளவியல் தேவைகளை நிறைவேற்றுவதற்குரிய தொடர்பு ஊடகம் என்பதை உணரவேண்டும்.

கல்வி மேம்பாட்டுக்குரிய மொழித்திறன் சமூக பொருளாதாரக் காரணிகளினாற் பெருமளவு உருவாக்கப்படுகின்றது. ஏழ்மை, அந்நியமாகிய வாழ்க்கை நிலை போன்ற சூழலில் வாழும் குழந்தைகளின் பேச்சுத்திறன் முதிர்ச்சி தாமதித்தே பொதுவாக நிகழ்கின்றது.

மொழித்திறன் விருத்தியும் சமூக விருத்தியும் ஒன்றிணைந்தவை. சமூக முதிர்ச்சி என்பது, சமூகத்துடன் தொடர்பு கொள்ளல், கூடி வாழ்தல், புரிந்துணர்வு, விட்டுக் கொடுத்தல், சமூக நியமங்களை அறிந்து கொள்ளல் என்ற பல வகையான பரிமாணங்களைக் கொண்டுள்ளது.

குழு நடவடிக்கைகளைக் கையாளுவதன் வாயிலாக மாணவரிடத்துச் சமூக விருத்தியை மேம்படுத்த முடியும். தமது வயது, விருப்பு வெறுப்புக்கள், நோக்கங்கள் என்பவற்றை அடியொற்றிய குழுக்களையே மாணவர் பெரிதும் விரும்புவர். தமது குடும்பத்திலே கிடைக்காத உளவியல் சார்ந்த தேவைகள் குழுநிலைகளில் நிறைவேற்றப்படுவதை மாணவர் நன்கு உணர்வர்.

விளையாட்டுக்கள் சமூக முதிர்ச்சியை மேம்படுத்துகின்றன. மிகுதியான ஆற்றல்கள் விளையாட்டுக்களின் வாயிலாகச் சமூக நோக்கில் வெளியிடப்படுகின்றன. எதிர்கால வாழ்க்கைக்குரிய பல்வேறு திறன்கள் விளையாட்டின் வாயிலாகக் கற்றறியப்படுகின்றன. நனவு உணர்வு

களிலும், நனவிலி உணர்வுகளிலும் விளையாட்டுக்கள் தாக்க விளைவுகளை ஏற்படுத்துவதனால், கல்வியில் விளையாட்டுக்கள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன.

மாணவர்களது பிரச்சினைகளை ஆசிரியர் அறிந்து கொள்வதற்கு உளவியலறிவு வாய்ப்புத் தருகின்றது. சில பிரச்சினைகள் வெளிப்படையாகத் துலங்கும். சில பிரச்சினைகள் அவிந்த எரிமலை போன்று மாணவரது உள்ளத்திலே குமைந்த வண்ணமிருக்கும். மாணவரது நடத்தைகளை நுட்பமாக நோக்கும்பொழுது பிரச்சினையின் தெறிப்புக்களை ஓரளவாயினும் அறிந்து கொள்ள முடியும்.

வீரல் சுவைத்தல் மாணவருக்குரிய பிரச்சினை வெளியீட்டின் குறியீடாக அமைகின்றது. மகிழ்ச்சியின்மையின் ஒரு வகை வெளிப்பாடே விரல் சுவைத்தலாகும். பள்ளி செல்லும் பருவத்தில் ஒருவன் தொடர்ந்து விரல் சுவைத்தலில் ஈடுபடுவானாயின் அவனது பல், முரசு, உதடு ஆகியவற்றின் வளர்ச்சி பாதிக்கப்படும். முகத்தின் அழகு விகாரமடையும். மாணவனுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் உபாயத்தைப் பயன்படுத்தி விரல் சுவைத்தலைத் தடுக்க முயல வேண்டும்.

விரல் சுவைத்தலுடன் இணைந்த பிறிதொரு நடத்தை நகங் கடித்தலாகும். ஒருவித அடக்கு முறைக்கும், உளவியல் சார்ந்த ஒடுக்கு முறை

களுக்கும் உட்படும் மாணவர்களே நகம் கடித்தலில் ஈடுபடுகின்றனர். இந்த அனுபவங்கள் ஆழ் மனத்தின் நெருடலாக அமைய, நகம் கடிக்கின்றோம் என்ற உணர்வின்றியே கடிப்பார்கள்.

வன்முறை வெளிப்பாடும் மாணவர்களது பிரச்சினைகளைக் காட்டும் நடத்தையாக அமைகின்றது. வன்முறை தனக்குத்தான் காட்டுவதாக இருக்கலாம்; அல்லது பிறபொருள்கள் மற்றும் மனிதருக்குக் காட்டுவதாகவும் அமையலாம். கத்துதல், குதித்தல், தனது உடலுக்குத் தானே காயமிழைத்தல் முதலியவை முதலாவது பிரிவைச் சேர்ந்தவை. பொருள்கள் மீது வன்முறையைக் காட்டும் மாணவர்கள் பொதுச் சொத்துக்களுக்கு அழிவைக் கொடுக்கின்றனர். சண்டித்தனத்தை ஆசிரியர் ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், குறித்த மாணவர் மீது எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளாது அன்பும் ஆதரவும் மகிழ்ச்சியும் தரும் நேர் நடத்தைகளைக் காண்பிப்பதே பொருத்தமான உபாயங்கள் என்பதை உளவியல் ஆய்வுகள் வலியுறுத்துகின்றன.

பாடசாலைக்கு வராது நிற்றலும், கலைத் திட்டச் செயற்பாடுகளைப் புறக்கணிப்பதும் மாணவரது உளவியற் பிரச்சினைகளை வெளிப்படுத்தும். மாணவர் ஏன் பாடசாலைச் செயல் இயக்கங்களிலே முழுமையாக ஈடுபட முடியாதிருக்கின்றதென்ற ஒவ்வொரு காரணங்களையும் பகுத்து

ஆராய்ந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பதிலாக அவர்களைத் தண்டிக்க முயல்வது நிலையை மேலும் சிக்கலாக்கும்.

ஒழுங்கற்ற பேச்சு, குரல் தடுமாறுதல், எழுத்துப் பிழைகளைப் பரவலாக விடுதல், வசனங்களை ஒழுங்கற்ற முறையில் அமைத்தல், எழுத்துக்களில் ஒருவித ஒத்திசைவின்றிக் கோணல் மாணலாக எழுதுதல் முதலியவை மாணவரது உளவியற் பிரச்சினைகளின் அறிகுறிகளாகும். அதிர்ச்சிக்குள்ளாதல், நோய்வாய்ப்படல், அடிப்படைத் தேவைகள் புறக்கணிக்கப்படல் முதலியவற்றால் மேற்கூறிய ஒழுங்கின்மை ஏற்படுகின்றது. இத்தகைய பிரச்சினைகள் உள்ள மாணவர்கள் எவ்வகையிலும் புறக்கணிக்கப்படலாகாது. புறக்கணித்தல் மேலும் பின்னடைவுகளையே உருவாக்கும்.

நாணமும் கூச்சமும் உளப் பிரச்சினைகளைப் பிறிதொரு வகையிலே வெளிப்படுத்துகின்றன. உளத்தாக்கங்களால் நிகழ்ந்த சிறுமையுணர்ச்சியும், தாழ்வுணர்ச்சியும் நாணம், கூச்சம் முதலியவற்றை ஏற்படுத்துகின்றன. தாழ்வுணர்ச்சி ஓரளவு காணப்படுதல் இயல்பானதாயினும், மிகையான தாழ்வுணர்ச்சியே பிரச்சினையின் வெளிப்பாடாகும். இச்சந்தர்ப்பத்தில் மாணவருக்குத் தன்னம்பிக்கை தரும் பணிகளை ஆசிரியர் மேற்கொள்ளல் வேண்டும்.

பொய் கூறுதலை மிகையாகக் கையாளுதலும் பிரச்சினையின் பிறிதொரு வெளிப்பாடாகும். தன்னை உயர்ந்தவனுக்குவதற்குக் கூறும் பொய், தனது தோல்வியையும் குறைகளையும் மறைப்பதற்குக் கூறும் பொய், காரணமின்றி உரைக்கும் மலினமான பொய் முதலியவை பிரச்சினையை வெளிப்படுத்தும். தண்டனைகள் பொய் உரைத்தலை மேலும் பன்மடங்காக்கும். பொய் பேசத் தக்க நிலைகள் எழாதவாறு பார்த்தல் ஆசிரியரின் கடமையாகும். சமூக பொருளாதார பிரச்சினைகளிலிருந்து பொய் உரைத்தலைப் பிரித்துவிட முடியாது.

பிறர் பொருள்களைத் தமக்குரிய பொருள்களாகக் கவர்தலும் பிரச்சினையை வெளிப்படுத்தும் நடத்தையாகும். உரியவாறு தேவைகள் நிறைவேற்றப்படாமையும், தகுந்த முறையிற் கல்வி பெறாமையும், தவறான விழுமியங்களுக்கு உட்படுத்தலும், பிறரது பொருள்களைக் கவரத் தூண்டுகின்றன. பிறரது பொருள்களைக் கவரும் பொழுது எழும் ஒருவித உளக்கிளர்ச்சியை அனுபவிக்கும் நிலையும் அத்தகைய நடத்தைக்குத் தூண்டுதலளிக்கின்றது. காரணங்களை நோக்காது விளைவுகளுக்குத் தண்டனை வழங்குவதால் இப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

உடல், உளம் சார்ந்த நோய்களும் சிறாரின் உளப்பிரச்சினைகளை வெளிப்படுத்துகின்றன. அதீத சோம்பல், இணைப்புறு பயம், நரம்புத் தளர்ச்சி, பதகளிப்பு, பொதுவான நியமங்களை

விட்டு வழுவுதல் போன்றவை மாணவரிடத்துக் காணப்படுமாயின் அவை கல்வியின் முன்னேற்றத்தைப் பின்னடையச் செய்யும். இவை நலிவடைந்த சமூக பொருளாதாரக் கோலங்களின் தவிர்க்க முடியாத வெளிப்பாடாக இருப்பதனால் ஆசிரியர் மட்டும் தனித்து அத்தகைய பிள்ளைகளுக்கு உதவுதல் கடினமாகின்றது.

கற்றலும் கற்பித்தலும் :

மனித நடத்தையில் முன்னேற்றகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் இடையறாத தொழிற்பாடுகளே கற்றலும் கற்பித்தலுமாகும். கற்றல் என்பது முரணியல் வழியாக இருக்கின்றது. அறியாமை என்ற எதிர்விசை இருப்பதனால் அறிதல் என்ற நேர்விசை தொழிற்படுகின்றது. அறியாமையும், அறிதலும் இணக்கம் காண முடியாத முரண்பாடுகளாக உள்ளன. கற்றல் பற்றிய அடிப்படைப் பண்புகளை ஆசிரியர் அறிந்திருப்பராயின், கல்விப் பணிகள் மேலும் முன்னேற்றம் பெற இடமுண்டு.

எல்லா மனிதரும் எந்த வயதிலும் கற்கும் திறன் உடையோராய்க் காணப்படுகின்றனர். நீண்ட பரிணாம வளர்ச்சியின் காரணமாக மனிதனிடத்துப் படிமலர்ச்சி கொண்டுள்ள மூளையின் அமைப்பு கற்றலுக்கு உறுதுணையாகின்றது. மனித உழைப்பும், கற்றலும் வேறு பிரிக்க முடியாதவை. உழைப்பில் நிகழ்ந்த வளர்ச்சி,

கற்றலில் நிகழ்ந்த வளர்ச்சியாயிற்று. கற்றலுக்கு அடிப்படையாக அமையும் மூளை, கட்புலன், செவிப்புலன், தொடுபுலன், முகர்புலன் முதலியவை நீண்ட நெடிய மனித உழைப்பின் பெறுபேறாக மலர்ச்சி கொண்டுள்ளன. உழைப்பின் கல்வி வடிவமாக எழுந்த மொழியானது கற்றலை மேலும் விசைப்படுத்த உதவுகின்றது.

கற்றல் எவ்வாறு நிகழ்கின்றது என்ற விஞ்ஞான பூர்வமான ஆய்வின் முன்னோடிகளுள் ஒருவராக ரூசிய விஞ்ஞானியாகிய பவ்லோவ் (1849-1936) விளங்கினார். நிபந்தனைப்பாட்டினால் அல்லது ஆக்க நிலையுறுத்தலினாற் கற்றல் நிகழ்கின்றதென்பது இவரது கருத்தாகும். நிபந்தனைப் படுத்தல் என்பது தூண்டிக்கும் துலங்கலுக்கு மிடையே நிகழும் நிலையுறுத்தலைக் குறிப்பிடுகின்றது. உணவுக்கு உமிழ்நீர் சுரக்கும் ஒரு நாய் நிபந்தனைப்படுத்தலால் உணவுக்கு முந்திய மணியொலியைக் கேட்டு உமிழ்நீர் சுரக்கின்றது. கற்றல் என்பது நிபந்தனைப் படுத்தலுக்குள்ளான தெறிவினைகளின் தொடர்ச்சியென்று பவ்லோவ் கண்டார்.

நிபந்தனைப்பாட்டுக் கொள்கை இணைப்புக் கொள்கையிலும் வேறுபட்டது. நிபந்தனைப் பாட்டுக் கொள்கை உடலுறுப்புக்களுடன் தொடர்புடையதாக இருப்பதுடன் அளவிடக் கூடிய பண்பையும் கொண்டுள்ளது. இணைப்புக் கொள்கை மெய்யியலுடன் கூடிய தொடர்பு

கொண்டது. எண்ணங்கள் அனுபவங்கள், ஆகிய பற்றுக்கிடையே அடுத்தடுத்துக் காணப்படும் தொடர்புக் கோவையினை இணைப்புக் கொள்கை விளக்குகின்றது.

நிபந்தனைப்பாட்டுக் கொள்கையில் தூண்டியை மேலும் மேலும் வலிதாக்க மிகவும் சக்தியுள்ள துலங்கலைப் பெறமுடியும். கவனத்தைச் சிதைக்கும் தூண்டிகள் துலங்கலை வலு விழக்கச் செய்யும். உபயோகம் இன்மை அல்லது பயன் இன்மை ஆகிய பண்புகளாலும் நிபந்தனைப் படுத்தல் சிதைவடைந்து விடும். மேற்கூறிய அனுபவங்கள் ஆசிரியருக்குப் பயனுள்ள அறிவுறுத்தல்களைத் தருகின்றன. கற்பித்தலில் வலுவான தூண்டிகளைக் பயன்படுத்தும்பொழுது கூடுதவான விளைவுகளை மாணவரிடத்து ஏற்படுத்த முடியும். கவனச் சிதைவுகளைக் கற்பித்தலிலே ஏற்படுத்தலாகாது. கற்றல் உபயோகமானதாகவும் பயனுள்ளதாகவும் அமைக்கப்படல் வேண்டும்.

தோர்ண்டைக் (1874 - 1949) என்னும் உளவியலாளர் கற்றல் பற்றிய சில விதிகளை விளக்கினர். முயன்று தவறிக்கற்றல் என்ற கோட்பாடு இவரோடு இணைத்துக் கூறப்படுகின்றது. ஹல், ஸ்கின்னர் ஆகியோர் கற்றலில் மீளவலியுறுத்தற் கோட்பாட்டினை உருவாக்குவதற்கு தோர்ண்டைக் முன்னோடியாக விளங்கினர் என்பதை மறுக்க முடியாது. விலங்குத

ளிடத்து மேற்கொண்ட ஆய்வுகளில் இருந்து மூன்று அடிப்படையான விதிகளை தோர்ண்டைக் விளக்கினார். அவை:

(அ) ஆயத்த விதி
(ஆ) பயிற்சி விதி
(இ) விளைவு விதி

இவற்றோடு சில துணை விதிகளையும் தோர்ண்டைக் முன்மொழிந்தார்.

கற்றலுக்கு ஆயத்தம் என்பது அடிப்படையானது. ஆயத்தமின்றி அறைகூவல்களை எதிர்கொள்ள முடியாது. உள்ளார்ந்த வகையில் எழும் ஆயத்தம், மனப்பான்மைகளின் வழியாக எழும் ஆயத்தம் என்று ஆயத்தநிலைகள் பகுத்தாராயப்படுகின்றன. உடல் முதிர்ச்சியின் வழியாக எழும் ஆயத்தம் உள்ளார்ந்த வகை ஆயத்தத்துக்கு எடுத்துக் காட்டாகும். அனுபவம், கவர்ச்சி, தேவைகள் என்பவற்றின் வழியாக எழும் ஆயத்தம் இரண்டாவது வகை ஆயத்தத்தை புலப்படுத்தும். ஆயத்தமின்றிக் கற்றல் நிகழ முடியாதாகையால் ஆயத்தம் பற்றி ஆசிரியர் கவனம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பது பயிற்சி விதியை ஓரளவு விளக்கும் தொடராகும். பயன்விதி பயனில் விதி எனப் பயிற்சிவிதியைப் பாகுபடுத்தலாம். தூண்டியைத் தொடர்ந்து துலங்கல் நிகழாது

விடிற் கற்றல் நிகழ்ாட்டாது என்பதைப் பயனில் விதி விளக்குகின்றது. பயிற்சி தொடர்ந்து நிகழவேண்டும், நீண்ட இடை வெளி விட்டுப் பயிற்சி வழங்கப்படலாகாது. திட்ப நுட்பமும் தெளிவும் பயிற்சியில் இடம் பெறல் வேண்டும் என்பதை இந்த விதி வற்புறுத்துகின்றது. பல கோணங்களிற் பயிற்சியை வழங்குதல், தொடர்ச்சியாகப் பயிற்றுவித்தல், கற்றதை மீள்பார்வை செய்தல், வாழ்க்கையிற் பயன்படுத்துதல் என்பவற்றை ஆசிரியர் மேற்கொள்வாராயின் கற்றல் கற்பித்தலில் வினைத்திறன் மேலோங்கும்.

ஆனால் மீண்டும் மீண்டும் புதுமையின்றிப் பயிற்சியளிப்பது அலுப்பும் சலிப்பும் ஏற்படக் காரணமாகின்றது என்பதை உளவியலில் நிராகரிக்கமுடியாது. இந்நிலையிற் பயிற்சி என்பது மனநிறைவோடும், ஈடுபாட்டோடும் புதுமையோடும் ஒன்றிணைக்கப்படல் வேண்டும்.

விளைவுவிதி விளைவு உண்டாக்கல் விதியென்றும் கூறப்படும். கற்போன் தான் கற்கும் பாடத்தினால் உளநிறைவைப் பெறல் வேண்டும். வகுப்பு உயர்ச்சி, வெகுமதி முதலியவற்றை வழங்குதல் இவ்விதியை அடியொற்றிய நிகழ்ச்சிகளாகும். ஆனால் வெகுமதிக்காகக் கற்றல் என்பது கல்வியின் இலக்கினை ஓர் ஒடுங்கிய இடைவெளிக்குள்ளே கொண்டுவந்துவிடும் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

தோர்ண்டைக் குறிப்பிட்ட துணை விதிகள் அல்லது இரண்டாம் நிலை விதிகள் வருமாறு:

(அ) மனப்பான்மைவிதி.
(ஆ) பல தரப்பட்ட துலங்கல் விதி
(இ) ஒப்புமை விதி
(ஈ) இணைப்பு மாற்றவிதி
(உ) பகுதிநிலைச் செயல்விதி

கற்பவனது மனப்பான்மை குறிப்பிட்ட துலங்கல் வெளிப்படக் காரணமாக அமைகின்றதென்பதை மனப்பான்மைவிதி விளக்கும். பல்வேறு சந்தர்ப் பங்களில் பலதரப்பட்ட துலங்கல் குறிப்பிட்ட தூண்டிகளுக்கு ஏற்படுவதைப் பலதரப்பட்ட துலங்கல்விதி குறிப்பிடுகின்றது. ஒத்த நிலைமை களில் ஒரே மாதிரியாக நடப்பதற்கு மனிதர் முயல்கின்றனர் என்பது ஒப்புமை விதியால் விளக்கப்படுகின்றது. தூண்டி துலங்கலை ஏற்படுத்தும் பொழுது, குறித்த தூண்டியோடு இணைப்புக் கொண்ட வேறொரு தூண்டி அதே துலங்கலை ஏற்படுத்தலாம் என்பது இணைப்பு மாற்றவிதியால் விளக்கப்படுகின்றது. கற்கும் பொழுது ஒரு சிறிய பகுதிப் பொருள் மீது அதீத கவனமும், அதே பொருளையே பின்னர் பிரயோகிக்கும் திறனும் பெறப்படுகின்றது என்பதைப் பகுதிநிலைச் செயல்விதி விளக்கு கின்றது. உதாரணமாக எழுதிக் கணக்குப் பார்த்துப் பழகிய ஒரு பிள்ளை இலகுவாக மனதாற் பார்க்கக் கூடிய ஒரு புதிருக்கும் எழுதிப்பார்த்து விடை காண முயலுகின்றது.

தோர்ண்டைக்கின் இரண்டாம் நிலைவிதிகள் கற்பித்தலில் ஆசிரியருக்குப் பெருமளவிற் பயன் படுகின்றது. கல்வி தொடர்பான நம்பிக்கை தரும் நேர் மனோபாவங்களை ஏற்படுத்தும் பொழுது, கற்றல் முன்னேற்றம் பெறும். கற்பிக்கும் சந்தர்ப்பத்திலும் சூழலிலும் பல தரப்பட்ட துலங்கல்கள் தோன்றுவதால் பன்முகப்பட்ட முறைகளையும் அனுபவங்களையும் பயன்படுத்திக் கற்பிப்பது சிறந்த அணுகுமுறை யாக அமையும்.

கற்பிக்கும் பொழுது ஒத்த பண்புகளைத் தொடர்புபடுத்தல், ஒரே விதி பல்வேறு சந்தர்ப் பங்களுக்கும், பாடங்களுக்கும் பயன்படுவதைச் சுட்டிக் காட்டுதல் முதலியவை சிறந்த கற்பித்தற் பண்புகளாகும்.

இணைப்பு மாற்றவிதியையும் ஆசிரியர் தமது கற்பித்தலின் போது பயன்படுத்த முடியும். நீண்ட செய்கை முறை என்ற தூண்டியாலும் ஒரு கணிதப் புதிருக்குரிய துலங்கலாகிய விடையைப் பெறமுடியும். குறுகிய ஒரு செய்கை முறையாலும் அதே விடையைப் பெறமுடியும்.

கற்பித்தலின்போது குறிப்பிட்ட சில பகுதிகள் கற்றலுக்குக் கூடுதலாக உதவி செய்யும் என்று கருதும் பட்சத்தில் ஆசிரியர் அப்பகுதிகள் மீது கூடிய அழுத்தங் கொடுத்துக் கற்பித்தல் வேண்டும்.

ஸ்கின்னர் உருவாக்கிய கருவிசார் நிபந்தனைப்பாட்டுக் கோட்பாடு தொல்சீர் நிபந்தனைப்பாட்டுக் கோட்பாட்டிலிருந்தும் வேறுபட்டது என்பது விமர்சனத்துக்குரியது. தொல்சீர் நிபந்தனைப்பாட்டுக் கோட்பாடு பவ்லோவ், உவாற்சன் போன்றோரால் உருவாக்கப்பட்டது. இக்கோட்பாட்டில் துலங்கல் எதிர்பார்ப்புக்குரிய தொன்றாக விளங்குகின்றது. ஆனால் ஸ்கின்னரின் கருவிசார் நிபந்தனைப் பாட்டில் கற்கும் மாணவன் தனது சூழலைத் தானே தொழிற்படுத்தி வெகுமதியைப் பெறுவதன் வாயிலாகக் கற்றல் நிகழ்த்தப்படுகின்றது. இதனால் கருவிசார் நிபந்தனைப்பாடு தொழிலி நிபந்தனைப்பாடு என்றும் கொள்ளப்படுகின்றது. தொழிற்பாட்டினாற் கிடைக்கும் வெகுமதி மீளவலியுறுத்தியாகத் தொழிற்படுகின்றது. தொல்சீர் நிபந்தனைப்பாட்டுக் கோட்பாட்டிலும் வெகுமதி ஒரு பிரதான உறுப்பாக விளங்குதலை நிராகரிக்கமுடியாது. ஆனால் கருவிசார் நிபந்தனைப்பாட்டில் மாணவருக்குக் கூடுதலான சுதந்திரம் தரப்படுகின்றது என்பதே பிரதான வலியுறுத்தலாகின்றது.

ஸ்கின்னருடைய ஆய்வுகள் வகுப்பறையிலே பயனுடையதாகவும் விளங்குகின்றன. நேர்மீள வலியுறுத்தல், எதிர்மீள வலியுறுத்தல் என்பவற்றால் கற்றலை நெறிப்படுத்தலாம். வெகுமதியும் உற்சாகமளித்தலும் கற்றலை மேம்படுத்தும். தண்டனையிலிருந்து தப்புவதற்காகவும் மாணவர்

கற்க முயல்வர். தண்டனை என்பது மிகவும் பரந்த பொருளுடையது. உளம் சார்ந்த ஒரு மென்மையான அதிர்ச்சியை உண்டாக்குதலும் தண்டனையாகும். மீள வலியுறுத்தல் தொடர்ந்து நிகழாவிடிற் கற்றல் மங்கி மறைந்துவிடலாம். கற்கும் பாடங்களிற் பயிற்சி, வாசிப்பு, கலந்துரையாடல் முதலியவை தொடர்ந்து நிகழாவிடில் அவை நினைவிலிருந்து வழுவி விடலாம்.

தெரிவு செய்து மீள வலியுறுத்துதல் என்பதாலும் கற்றலை மேம்பாடு கொள்ளச் செய்யலாம். குறித்த கேள்வித் தூண்டலுக்கு மாணவர் பல்வேறு துலங்கலைத் தரலாம். அவற்றுள் சரியானவற்றைத் தெரிவு செய்யுமாறு முயற்சித்தல் வேண்டும். பலவினுள் ஒன்றைத் தெரியும் புறவயமான சோதனை முறையும் இத்தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

தொடர் மீளவலியுறுத்தலின் வாயிலாகப் படிப்படியான முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். சிக்கல் நிறைந்த ஒரு செயற்றிட்டத்தை ஒரே நாளில் மாணவர் செய்து முடிக்க வேண்டியதில்லை. செயற்றிட்டத்தைச் சிறுசிறு கூறுகளாக்கி அவற்றை மீளவலியுறுத்தி தொடர்ச்சியாக முன்னேற்றம் பெறச் செய்யலாம்.

கற்கும்பொழுது சைகைக் குறிகளைக் குறைத்தலும் பிரதான நிகழ்ச்சிகளாக அமைகின்றது. ஒவ்வொரு படிநிலையாகப் பல்வேறு அமைப்புக்

களைச் செய்து இறுதியில் ஒரு கணித விடையை பெறும் மாணவர்கள் கற்றலில் விருத்தியைப் பெறும் பொழுது சுற்றி வளைக்காது நேரடியாகவே விடையை அணுகுவதற்குரிய முன்னேற்றத்தைப் பெறுவர்.

மீளவலியுறுத்தல் வாயிலாக ஒரு மாணவனது நடத்தையைச் செப்பனிட்டு மெருகு பெறச் செய்யலாம். ஒருவனது நற்பண்புகள் தொடர்ச்சியாக மீளவலியுறுத்தப்படும் பொழுது அவன் நல்லவனாக உருப் பெறுகின்றான்.

ஸ்கின்னருடைய ஆய்வுகள் பின் ஊட்டல் என்பதன் சிறப்பியல்பையும் வலியுறுத்தியுள்ளன. இது பெறுபேற்றின் பின் ஊட்டல் என்றும் கூறப்படும். மாணவரது தேர்வுகளுக்கு உடனடியான சித்தி கிடைக்கும் பொழுது அவர்கள் மேலும் உற்சாகமடைந்து கற்றலில் ஈடுபடுவர். மாணவரது அப்பியாசங்களை உடனுக்குடன் திருத்திப் புள்ளியிடுதல் மாணவருக்குக் கூடிய செயலூக்கத்தைக் கொடுக்கும்.

மீளவலியுறுத்தல் தொடர்பாக ஸ்கின்னர் கண்டறிந்த அளவுத் திட்டங்களும் ஆசிரியருக்கு உபயோகமுள்ளன. கால அளவுத்திட்டம் விகித அளவுத்திட்டம் என்பவற்றில் விகித அளவுத் திட்டம் செயற்படுவோனது இயல்புகள் மேலோங்கி நிற்றலைப் புலப்படுத்தும். இந்த இயல்புக் கேற்ப எத்துணை விரைந்து தாம்

பணிகளை நிறை வேற்றுகிறார்களோ அதற்கேற்ப தமக்கு வெகுமதி கிடைக்கும் என்ற உணர்வை ஆசிரியர் ஏற்படுத்துதல் வேண்டும்.

கற்பித்தலில் தூண்டிப் பொதுமையாக்கல், தூண்டி வேறு பிரித்தறிதல் என்ற கூறுகளும் ஆசிரியருக்கு உறுதுணையாயிருக்கும். இந்து மாகடலின் இயல்புகள் இலங்கையைப் பாதிக்கின்றன. அவ்வாறே இந்து மாகடலின் இயல்புகள் மாலைதீவுகளையும் பாதிக்கும் என்பது தூண்டிப் பொதுமையாக்கற் கற்பித்தலுக்கு ஒரு சிறு எடுத்துக்காட்டாகும். தூண்டி வேறு பிரித்தறிதலும் கற்றலில் இன்றியமையாத கூறாகும். தொடக்கப்பள்ளிச் சிறுவர்கள் ''கெ'' ''கோ'' என்ற இரு தூண்டிகளுக்குமிடையே வேறுபாடு காணாத விடத்து சாதாரண எழுத்துப் பிழைகளை விடநேரிடுகின்றது.

ஸ்கின்னரது ஆய்வுகளை அடிப்படையாகக் கொண்டு, நிகழ்ச்சித் திட்டமாக்கப்பட்ட கற்பித்தல் அல்லது நிரலித்த கற்பித்தல் இன்று உருவாக்கப்பட்டுள்ளன. விரிந்த பாடப்பரப்பு சிறு சிறு அலகுகளாகப் பிரிக்கப்படல் வேண்டும். ஒவ்வொரு சிறிய அலகுக்கு மிடையே மலர்கள் இணைக்கப்பட்ட மாலை போன்ற தொடர்பு இருத்தல் அவசியம். மாணவர் குறித்த சிறிய அலகைக் கற்றவுடன் தாம் தந்த விடை சரியா என்று உடனடியாக அறிந்து கொள்ளத் தக்க ஏற்பாடு வேண்டப்படுகிறது. தமது விடை சரியானது என்ற உளப் பூரிப்பைக் கண்டதும்

அவர்கள் அடுத்த அலகுக்குச் செல்லக்கூடிய பின்னூட்டல் கிடைக்கின்றது. இத்தகைய தொடர்ச்சியில் அமைக்கப்படுவதே நிகழ்ச்சித் திட்டமாக்கப்பட்ட கற்பித்தலாகும். இத் திட்டத்தின்படி ஒவ்வொரு மாணவனும் தத்தமது இயல்புக்கேற்ப முன்னேறிச் செல்ல முடியும்.

கற்றல் பற்றி விளக்கவந்த ரெூபேற் எம். காக்னே என்பார் உலகைத் தழுவிக்கொள்ள முயலும் மனித ஆற்றல் மகத்தானது என்றும், தழுவமுயலும் உலகம் வெகுசிக்கலானது என்றும் குறிப்பிட்டார். கற்றல் சமூக இடைவினைகளால் நிகழும்பொழுது அது உற்று நோக்கப்படத்தக்கதாயுள்ளது.

தனியாளுக்குப் பல்வகைப்பட்ட ஆற்றல்கள் உள்ளன. தனியாள் சமிக்ஞைகள் வாயிலாகச் சூழலுடன் இடைவினை கொள்ளல் நுண்மதியாற்றல் எனப்படும். தகவல்களைச் சொல்சார்ந்த வடிவமைக்கும் திறன் தனியாளுக்கு உண்டு. தகவல்களைப் பகுத்தாராய்ந்து பிரச்சினை விடுவிக்கும் திறனும் பயனுள்ள ஓர் ஆற்றலாகும். உடலியக்கத்திறன்கள், பொருள்கள் சம்பவங்கள் தொடர்பான மனப்பாங்குகள் என்பனவும் தனியாளுக்கு உண்டு.

கற்பவன் சமூக இயல்பினாலுகவும் தரப்படும் தூண்டிகள் அறிவாக மலர்ச்சி கொள்ளப்படத் தக்கனவாயுமுள்ளன. தூண்டியின் உள்ளடக்கம்

குறுங்கால அல்லது நீண்டகாலத் துலங்கல்களை ஏற்படுத்தலாம். கற்றலைத் திட்டமிடலும், முகாரித்தலும், கற்பவனுக்குப் புறம்பாக உள்ள வற்றை ஒழுங்கமைத்துப் போதித்தலும் கல்வி சார்ந்த நடவடிக்கைகளாக உள்ளன.

கற்றல் இடமாற்றம் :

கற்றல் இடமாற்றம், அல்லது பயிற்சியின் பெயர்ச்சி பற்றிய உளவியற் கருத்துக்களும் கற்பித்தல் வெற்றிக்கு உறுதுணையாகவுள்ளன. ஒருமுறை தாம் கற்ற கல்வி, செய்திறன் மனோபாவங்கள், விழுமியங்கள் என்பவற்றை வேறு சந்தர்ப்பங்களுக்கும், நிலமைகளுக்கும் பயன்படுத்துதல் கற்றல் இடமாற்றம் என்று கூறுவர். உண்மையிற் கற்றலின் வெற்றி அதனை இடமாற்றும் திறனில் தங்கியுள்ளதென்று கூறலாம்.

கற்றோர் ஒரு துறையில் தாம் பெற்ற அறிவினை இன்னொரு துறைக்கும் பயன்படுத்து தல் வேண்டும். கற்றல் என்ற தொடர் சங்கிலியில் முன்பு கற்றதைப் பின்பு கற்பதோடு இணைத்தல் வேண்டும். கற்றல் இடமாற்றத் தைத் தனிமனிதனோடு மட்டும் தொடர்பு படுத்திப் பார்க்கும்பொழுது உளவியலாளர் பல இடர்களை எதிர்கொள்ள நேரிடும். கற்றவர் தவறிழைத்தலும், சமூக நோக்கின்றி வாழ்

தலும் கற்றல் இடமாற்றம் பெறவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றன என்று வாதிடலாம். இந்நிலையிற் கற்றல் இடமாற்றத்தினைச் சமூக பொருளாதார அடித்தளத்தின் மீது இணைத்தே நோக்குதல் வேண்டும். சுரண்டல்மிக்க சமூக அமைப்பிற் கல்வி விழுமியங்கள் வாழ்வின் எல்லாக் கூறுகளிலும் இடமாற்றம் பெறாது விடுதல் இயல்பாகின்றது. கற்றல் இடமாற்றம் பற்றிய ஆய்வுகளில் இருந்து பெறப்பட்ட அண்மைக்கால முடிபுகள் ஒத்த மூலக்கூறுகள் கோட்பாட்டினை வலியுறுத்தியுள்ளன. இரண்டு பாடநெறிகளுக்கிடையே கற்றல் இடமாற்றம் நிகழவேண்டுமாயின் இரண்டுக்கும் ஒத்ததான மூலக் கூறுகள் வேண்டப்படுகின்றன. கணித வியலுக்கும் பௌதிகவியலுக்கும் இடையே ஒத்த மூலக்கூறுகள் காணப்படுகின்றன. கணிதவியலை நன்கு கற்கும் ஒரு மாணவன் பௌதிகவியலை சிறப்பாகக் கற்க முடியும்.

கற்றல் இடமாற்றம் நிகழப் ''பொதுமை யாக்கல்'' என்ற பண்பைக் கண்டறிதல் வேண்டும். பொது விதிகள், பொதுச் செயற் பாடுகள் பொது இலக்குகள், பொது அனு பவங்கள் என்பவற்றைக் கண்டறிதல் பொதுமை யாக்கல் என்று கூறப்படும். எடுத்துக்காட்டாக ''சுத்தமாக இருத்தல்'' என்பது நலவியற் பாடத்துக்கு மட்டும் உரியதொன்றாக்கப் படாது, அது வாழ்க்கைக்கு முரியதாக்கப் படல் வேண்டும்.

பொது இணைப்புக்களைக் கண்டறிவதாலும் கற்றல் இடமாற்றம் நிகழ்த்தப்படுகின்றது. பொது இணைப்புக்களைப் புதுப்புது நிலமைகளிலும் செயற்படுத்துமாறு பயிற்சி தரப்படல் வேண்டும். இதனைச் செயற்படுத்தக் கற்றல் விளக்கத் திறனுடையதாக்கப்பட வேண்டியுள்ளது. அகக்காட்சி அனுபவங்களே கற்றல் இடமாற்றத்தை ஏற்படுத்தும் என்பதை கெஸ்ரோல்ற் உளவியலாளர் அல்லது முழுமைப்புல உளவியலாளர் குறிப்பிடுகின்றனர்.

பொதுவான தருக்க முறைமைகள் அனைத்துப் பாடங்களுக்கும் அனுபவங்களுக்கும் அடிப்படைகளாக இருப்பதால், பொதுத் தருக்க முறைமைகளை எத்தகைய அனுபவங்களிலும் கண்டறியும் பயிற்சியை வழங்கலாம். இந்த முறை வெற்றியளிப்பதற்கு இயங்கியல் பற்றிய அறிவை மாணவர்களுக்கு வழங்குதல் இன்றியமையாததாகின்றது.

தத்துவங்களுக்கும் நடைமுறைகளுக்குமுள்ள இணைப்பு, முறைகளை அறிந்து கொள்ளக்கூடியவாறு கற்றல் அனுபவங்களை அமைத்தல் கற்றல் இடமாற்றத்துக்கு வழிவகுக்கும். கல்விக்கும் வாழ்க்கைக்குமுள்ள இணைப்புக் கூறுகளைக் கண்டறியச் செய்தல் வாயிலாகக் கற்றல் இடமாற்றத்தை மேம்படுத்தலாம்.

கற்றல் இடமாற்றம் மனவெழுச்சியுடன் இணைந்தது. மகிழ்ச்சியும் பெருமிதமும் நிறைந்த சூழலும், மாணவர் ஆசிரியர் தொடர்பில்

நிகழும் அன்பும் ஆதரவும், மாணவரிடத்து எழுச்சி சார்ந்த பெயர்ச்சியை ஏற்படுத்தும். மனவெழுச்சியின் இயல்புகள் கற்றலையும், கற்றல் இடமாற்றத்தையும் பாதிக்கும். இவற்றை அறிந்து செயற்படுத்தும் திறமையுடையவர் சிறந்த ஆசிரியராகின்றார்.

நினைவுகூர்தலும் மறத்தலும் :

கற்றவற்றை மனத்திலிருத்தி வேண்டிய போது மீட்டெடுத்தல் நினைவுகூர்தல் எனப்படும். நினைவுகூர்தல் மூன்று பரிமாணங்களுடன் தொடர்புடையது. அவை கற்றல், மனத்திலே பதித்தல், மீட்டெடுத்தல் என்பவைகளாகும். மீட்டெடுத்தல் வெளிக் கொண்டு வரப்படும் செயலாகலாம் அல்லது அகத்திலே நிகழும் செயல் ஆகலாம். இந்தச் செயற்பாடுகளில் யாதாயினும் ஒரு துறை பாதிக்கப்படும்பொழுது ''மறதி'' ஏற்படுகின்றது.

முதிர்ச்சி, மனவெழுச்சிக் குழப்பங்கள், நோய்கள், விபத்துக்கள், முதலியவை நினைவு கூர்தலைப் பொதுவாகப் பாதிக்கும். கற்றல் முறைகள், பொருளறிந்து தெளிந்துகற்றல், மீளக் கற்றல், இடைவிட்டுக் கற்றல் முதலியவை நினைவுகூர்தலை வளமாக்கும் என்பதை ஆசிரியர் கருத்திற் கொள்ளவேண்டும்.

மனனம் செய் கற்றலி சிறு அலகுகளாயின் அவற்றை முழுமையாக கற்றுணர்தல் வேண்டும். மிகப் பெரிய பகுதியாயின் முழுமையை அறிந்து பின்னர் அவற்றை பொருண்மை கொண்ட பகுதி முறையிலே அமைத்துக் கற்றலானது நினைவு கூர்தற்கு எளிதாக அமையும். ஒரு பகுதியை மனனம் செய்து ஒப்புவிக்கக்கூடிய திறன் ஏற்பட்டவுடன் அவ்வளவில் நிறுத்திக் கொள்ளாது மேலும் மேலும் கற்றலும், பிரயோகித்தலும் பயனுள்ள நடவடிக்கையாகும்.

தற்காலக் கற்பித்தலில் அனைத்தையும் மனனம் செய்யவேண்டிய தேவை இல்லை. பெருமளவில் நினைவுக் குறியீடுகளைப் பயன் படுத்தி நினைவுகூர்தல் பயனுள்ள முயற்சியாகும். தொடர்புறு முறையில் நினைவு கூர்தலும் பிறிதோர் உபாயமாகும். பரவலாக நினைவுக்கு வரும் ஒரு பொருளுடன் பிறிதொரு கருத்தைத் தொடர்புபடுத்தி நினைவுகூர முடியும்.

நினைவுகூர்தல் மனத்திலே பதித்தலுடன் தொடர்புடையது. மனப்பதிவுகள் மூளையின் செயலியக்கங்களுடன் தொடர்பு கொண்டவை. மனத்திலே பதித்தலை கற்பதற்கு முந்திய நிகழ்ச்சிகளும் பிந்திய நிகழ்ச்சிகளும் பாதிக்கும். இவை ''தடைகள்'' என்றும் குறிப்பிடப்படும். மனவெழுச்சிக் கோலங்களும் மனத்திலே பதிக்கும் செயலை வேகமாகப் பாதிக்கும்.

நினைவுகூர்தலின் அடிப்படையிலேயே இன்றைய பரீட்சை முறைகள் சுழன்று கொண்டு இருக்கின்றன. ஒரு மாணவனது நினைவுகூரும் திறன் அவனுக்குக் கூடிய புள்ளிகளைக் கொடுக்கின்றது. இந்நிலையில் 'மறத்தல்' என்பது மாணவருக்குப் பல்வேறு உளநெருக்கடிகளை உருவாக்குகின்றன.

பல்வேறு காரணிகள் மறத்தலை உருவாக்கும். நாளாவட்டத்திற் பயன்படுத்தாநிலை, ஊக்கமற்ற பயிற்சி, வேறுபட்ட உளத்தொடைகளின் மத்தியிலே கற்றல், முன்னோக்குத்தடை, பின்னோக்கற் தடை, மனவெழுச்சிக் குழப்பங்கள், முதிர்ச்சி, மறதி, நோய், முதலியவை மறத்தலை உண்டாக்கும். முழுமையாக்கப்படாது தொடர்ந்து தேடுதலை உண்டாக்கும் கற்றல் மறத்தலை விலக்கும்.

மறத்தலால் நன்மையும் உண்டு. கேடு தரும் சம்பவங்களை மறத்தல், மகிழ்ச்சிக்குத் திறவு கோலாகின்றது. கலைத்திட்டம் நன்கு ஒழுங்கமைக்கப்படாத நாடுகளில் தவறான தகவல்களும் வழுக்களும் கற்பிக்கப்படுகின்றன. அந்நிலையிலும் மறத்தலால் நன்மை உண்டாகின்றது. ''மறந்துவிட்டோம்'' என்று கருதுபவை தேவை ஏற்படுமிடத்து நினைவுக்கு வந்து விடுவதுண்டு.

மறத்தல் ஒரே வீதத்தில் வீழ்ச்சியடைவதில்லை. நினைவில் நிறுத்துதல் வளையியை ஆராய்ந்தால் கற்றவுடன் மறத்தல் வீதம்

அதிகமாகவும், நாட்கள் செல்லச் செல்ல இவ் வீதம் அதிக வீழ்ச்சியின்றிச் செல்வதையும் காணலாம்.

நினைவுப் பயிற்சியை ஆசிரியர் வகுப்பறையில் நேர்ப்பண்புடன் வளர்த்தெடுத்தல் வேண்டும். பாட முடிவில் அன்றைய பாடத்தின் முக்கிய குறிப்புக்களைத் தொகுத்துக் கூறல் வேண்டும். நூல்களைப் படிக்கும் பொழுது குறிப்பெடுக்கும் பயிற்சியை மாணவரிடத்து விருத்தி செய்தல் வேண்டும். சம்பவங்களைத் தொடர்புபடுத்திக் கற்பித்தல், கற்றலின் பிரயோக நிலைகளைக் குறிப்பிடல், ஆழ்ந்து ஈடுபட்டுக் கற்றல், முதலியவற்றால் நினைவுத் திறனை வளர்க்கலாம்.

கவனம் :

கவனமின்றிக் கற்றல் இல்லை. கற்பித்தலிற் கவனம் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுதலை ஆசிரியர் மனங்கொள்ளல் வேண்டும். கவனம் என்பது நனவு வாழ்க்கையுடன் இணைந்தது. நமது புலன் உணர்பரப்பில் அமைந்ததே கவனப்பரப்பு. ஆனால் புலன் உணர் பரப்பு முழுவதும் கவனப்பரப்பில் இடம்பெறாது செல்லலாம். உதாரணமாக, பல்வேறு காட்சிகளில் ஒரு சில காட்சிகளே எமது கவனத்தை ஈர்க்கின்றன. அதாவது, பார்ப்போரைக் குவியப் படுத்தும் காட்சிகளே கவனத்தைப் பெறுகின்றன.

குவியப் பரப்புக்கு எல்லை உண்டு. வீட்டிலுள்ள ஒரு படம் ஒவ்வொரு நாளும் எமது குவியப்பரப்பில் இடம்பெறாது போகலாம். ஆயின் அது குவியப் பரப்பின் எல்லையில் இருக்கும். திடீரென அப்படம் மறைந்துபோனால் அதனை உணர்கின்றோம்.

உருவம் பின்புலம் என்ற அடிப்படையில் கெஸ்ரோல்ற் உளவியலாளர் கவனத்தை விளக்குகின்றனர். கவனம் என்பது முழுமையின் விளைவாக முகிழ்க்கின்றது என்பது அவர்களின் வாதம். பொருளின் அறிகையோடு கவனம் இணைந்தது. கவனம் என்பது இயக்கப் பண்பு கொண்டது. பொருளுக்குப் பொருள் அது தாவிய வண்ணமிருக்கும். அதனைக் கவன ஊசலாட்டம் என்பர்.

தூண்டியின் பண்பு, புதுமை, பொருண்மை முதலியவை கவனத்தை ஈர்க்கும் புறக்காரணிகளாகும்.

கற்றலின் மீது ஏற்படுகின்ற கவர்ச்சி, அக்கறை, விருப்பு முதலியவை கவனத்தை ஏற்படுத்துகின்றன. கவரும் தன்மை அகத்தாலும் புறத்தாலும் தீர்மானிக்கப்படும். அகம் என்பது உள்ளுணர்வுகளைக் குறிக்கும். கவரும் தன்மையும் கவனமும் வேறுபிரிக்க முடியாதவை.

முயற்சிகூடிய கவனமும், முயற்சி குன்றிய கவனமும் என்றவாறு கவனத்தைப் பிரித்துணரலாம். முயற்சிகூடிய கவனம் முயற்சி குன்றிய கவனமாகவும் படிமலர்ச்சிகொள்ளும். உதாரணமாக மிகுந்த முயற்சியெடுத்து ஒரு பாடத்தைக் கற்கத் தொடங்கும் மாணவன் பின்னர் அத்தகைய கடும் முயற்சி இன்றியே பாடத்தில் ஈடுபாடும் கவனமும் கொள்ள நேரிடும். இதற்கு மறுதலையாக முயற்சி குன்றிய கவனமும் முயற்சிகூடிய கவனமாக மாற நேரிடும். கற்பிக்கும் பொழுது முயற்சி குன்றிய கவனத்தைச் செலுத்திய மாணவன் ஒரு கட்டத்துக்கு மேல் விளங்காமையை அனுபவிக்கும் போது முயற்சி கூடிய கவனத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. நல்லாசிரியர் மேற்கூறிய இரண்டு வகையான கவனங்களையும் காலமறிந்து வளர்த்தல் நன்று.

வகுப்பறையிற் கவனத்தை ஈர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை ஆசிரியர் மேற்கொள்ளலாம். மாணவரின் தேவைகளை அறிந்து கற்பித்தல், மகிழ்ச்சியை உண்டாக்குதல், கற்பித்தலிற் பல்வேறு முறையியல்களைப் பயன்படுத்துதல், உடனடி இலக்குகளை நிறைவேற்றுதல், பல்வேறு துணைக் கருவிகளைப் பயன்படுத்துதல் புதுமை புகுத்துதல், குரலை உயர்த்தித் தாழ்த்தல் முதலியவற்றால் கவனம் அதிகரிக்கும். பாடத்தை ஆரம்பிக்கும் பொழுதே ஆசிரியர் கவன ஈர்ப்புடன் தொடங்கல் வேண்டும். மாணவரின் கவனச் சிதைவைக் கண்டறிந்து உடனுக்குடன்

மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பயனுடையது.

மாணவரின் கவனமின்மைக்கு ஆசிரியரும் பொறுப்பு என்பதை உணரல் வேண்டும். மாணவரின் கவனமின்மைக்கு ஆசிரியர் தண்டித்தால், பாசாங்கு வயப்பட்ட கவனத்தை மாணவர் காட்டுவர். இதனால் யதார்த்த விளைவுகள் கல்வியில் ஏற்படமாட்டா.

பல்வேறு காரணிகள் எமது மாணவரிடையே கவனக்குறைவை ஏற்படுத்துகின்றன. உணவு ஊட்டக்குறைவு, நோய்வாய்ப்படல், மாணவரின் உடல் வளர்ச்சியோடு இணங்காத தளபாடங்கள், களைப்பு, வினைத்திறன் குன்றிய கற்பித்தல், பாரம்பரியமான வகுப்பறை ஒழுங்கமைப்பிற் பின்வாங்கில் உள்ளவர்கள் புறக்கணிக்கப்படல், வேண்டாத போட்டிகளால் உண்டாகும் மன முறிவுகள் முதலியவை கவனத்திற் குறுக்கீடு செய்கின்றன.

புலன் காட்சி :

கற்றலின் அடிப்படை நிலை புலன்காட்சியாகும். அறிவாய்வியல், உளவியல் ஆகியவை புலன்காட்சி பற்றிய ஆய்வுகளை முன்வைக்கின்றன. கற்பித்தலில் ஆசிரியருக்கு உறுதுணையாயிருக்கும் புலன்காட்சிப் பண்புகள் விளக்கப்பட வேண்டியுள்ளன.

புலன்காட்சிக்கு அடிப்படையாகவும் ஆதாரமாகவும் இருப்பது புலன் உணர்ச்சியாகும். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற உறுப்புக்களின் வழியாக அறியப்படும் பண்புகள் புலன் உணர்ச்சியாகும். யாதாயினும் ஒரு தூண்டி இப்புலன் உறுப்புக்களைத் தூண்டுவதன் வாயிலாக புலன் உணர்ச்சி உருவாக்கப்படுகின்றது. புலன் உறுப்புகளுள் அதீத முக்கியத்துவம் பெறுபவை கண்ணும் செவியுமாகும். கற்றல் கற்பித்தலில் கண்ணும் செவியும் பெரும் பங்கு ஏற்பதனால் அவற்றை உயர்புலன்கள் என்றும் குறிப்பிடுவர். கற்றலுக்குரிய குறியீடுகள், படிமங்கள் ஆகியவற்றை உருவாக்குதலிலும் இப்புலன்கள் அடிப்படைத் தொடர்பை ஏற்படுத்துகின்றன.

புலன் உணர்ச்சிக்குப் பொருள் கோடல் புலன்காட்சி அல்லது புலக்காட்சி எனப்படும். பொருள் கோடல் என்பதை வியாக்கியானம் அளித்தல் என்றும் கூறுவர். ஒருவர் 'வா' என்று குரல் எழுப்புகின்றார். ஒலித்தூண்டல் எமது செவிப்புலனைத் தாக்குகின்றது. அது புலன் உணர்ச்சியாகும். அது யாருடைய குரல் என்று நாம் இனங்காணுதல் புலக்காட்சியாகும். புலன் உணர்ச்சியையும் புலக்காட்சியையும் தொடர்ச்சியாகவே கருதல் வேண்டும்.

புலன்காட்சியைத் தாக்கும் அகக்காரணிகளும் உண்டு; புறக்காரணிகளும் உண்டு தூண்டியைப் பொறுத்த காரணிகள் புறக் காரணிகள்

எனப்படும். உருவம், பருமன், தொடர்ச்சி தூரம், செறிவு, புறத்தூண்டிகளின் தாக்கம், பின்புலம் ஆகிய புறக் காரணிகள் புலன் காட்சியைப் பாதிக்கின்றன. புலன் நுகர்வோனது மனநிலை, உளத்தொடை, தேவைகள், முன் அனுபவங்கள், விழுமியங்கள் கருத்தேற்றம், எதிர் பார்ப்பு, சமூக நியமங்கள் முதலியவை அகக் காரணிகளாகின்றன. நமது கண்வில்லையின் வளைவு, பார்க்கும் கோணம், ஆழம், நிழல்கள் போன்றவை புலன்காட்சிக்குத் துணைசெய் கின்றன.

புலன் உணர்ச்சிகளுக்குத் தவறான விளக்கம் கொடுக்கும் அனுபவம் திரிபுக்காட்சி எனப் படும். ஆழம், நீளம், நகர்தல், ஒட்டுதல், பிரிதல், மாற்றுவடிவம் இல்லாத பொருள் என்றவாறு திரிபுக்காட்சிகள் தோன்றும். உள நோய்ப்பட்டவர்கள் ''இல்பொருள் காணல்'' என்ற அனுபவத்தையும் பெறுவார்கள். புலன் கடந்த காட்சி, தொலையுணர்வு, முன்அறிகை போன்ற புதிய அனுபவங்கள் பற்றியும் சில உளவியலாளர் கருத்துக்களைத் தருகின்றனர். இவை ''பரா'' உளவியல் என்ற பிரிவினுள் அடங்கும்.

புலன்காட்சி பற்றிய முழுமைக் கருத்தை கெஸ்ரோல்ற் உளவியலாளர் தந்துள்ளனர். நாம் ஒரு பொருளைத் தனித் தனிக் கூறுகளாக நோக்காது முழுப் பொருளாகவே நோக்கு

கின்றோம் என்பதை மேற்கூறிய முழுமைப்புல உளவியல் வலியுறுத்துகின்றது. உதாரணமாக ஓர் இலையைப் பார்க்கும் பொழுது அதன் நரம்பு, அதன் வளைவு, அதன் நிறம், அதன் உருவம் என்றவாறு தனித்தனியே நோக்காது ஒரு முழுப்பொருளாகவே புலன்காட்சி கொள்ளப் படுகின்றது. பகுதிகளில் இருந்து பொருண்மை கொண்ட முழுமை கட்டியெழுப்பப் படுகின்றது. அண்மை, ஒப்புமை, தொடர்ச்சி, நிறைவு சமச்சீர், பெயர்ச்சி போன்ற பண்புகள் முழுமை உருவாக்கத்திற் பங்கு கொள்ளுகின்றன.

மேற்கூறிய அனுபவங்கள் கற்றல் கற்பித் தலுக்குத் துணை செய்கின்றன. புலன்காட்சிக்கு அடிப்படையான புலப்பயிற்சியைப் பள்ளிக் கூடங்களில் வளர்த்தல் வேண்டும். புலப் பயிற்சியே கற்பித்தலின் அடிப்படை என்பதை மொன்ரிசோரி, கொமீனியஸ், ரூசோ, பெஸ்ட லோஸி போன்ற கல்வியியலாளர் வற்புறுத்தி யுள்ளனர், புலப்பயிற்சியினூடாக உற்று நோக் கலும், அறிதலும் வளர்கின்றன. ஒவ்வோர் புலனும் கல்வி தேடும் சாதனமாகக் கட்டியெழுப் பப்படல் வேண்டும். உற்று நோக்கும் திறன் கல்வி மேம்பாட்டை ஏற்படுத்துகின்றது.

புதிதாக மாணவர் பெறும் காட்சியை அவர்கள் தம்மனதில் ஏற்கனவேயுள்ள புலக் காட்சிகளுடன் இணைக்கும் செயல் பட்டறி புலக்காட்சி எனப்படும். இதனை உட்புலக் காட்சி

என்றும் கூறுவர். புதிய அறிவைப் பழைய அறிவோடு சங்கமிக்கச் செய்யும் கற்பித்தல் வெற்றிதரும். வெளிக்கள அனுபவம், சுற்றுலாக்கள், நூல் நிலையங்கள், வீடியோ மற்றும் திரைப்படக் காட்சிகள், கருத்தரங்குகள் முதலியவை புலக்காட்சியை புதுக்கியும் திருத்தியும் அமைப்பதற்கு வழிவகுக்கும். ஆசிரியரிலும் பார்க்க மாணவரது புலக்காட்சி குறைந்ததாய் இருக்கும் பட்சத்தில் மாணவரது நிலையிலிருந்தே கற்பித்தலைக் கட்டியெழுப்ப வேண்டும்.

கற்பித்தல் முறையியல் :

கற்பித்தல் வெற்றி பெறுதற்கு முறையியல் பற்றிய அறிவு வேண்டப்படுகின்றது. மாணவனை மத்தியாகக் கொண்ட கற்பித்தல் பற்றி உளவியல் பல கோணங்களிலும் வற்புறுத்திய பொழுதும், பரீட்சைகளின் மிகையாதிக்கம் ஆசிரியரது பணிகள் மீது அழுத்தங்களை ஏற்படுத்துகின்றன. இந்நிலையில் மாணவரிடத்து மனமுறிவை உண்டாக்காது அவர்களின் மகிழ்ச்சி, சுதந்திரம், வெளிப்பாடு ஈடுபாடு, ஆகியவற்றை விருத்தி செய்யும் கற்பித்தல் முறையியல்களைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது.

பெஸ்டலோசியின் குழந்தைப் பூங்கா முறை அல்லது கிண்டர்கார்டன் முறை புலன்கள் வழியான பயிற்சியினூடாக அன்பும் பரிவும் வழங்கிக் கற்பித்தல் மேற்கொள்ளலைத் தூண்டுகின்றது. குழந்தைகளை வளரும் செடிகளாகக் கண்டு அவர்களின் இயல்புகளுக்கேற்ப வளர்த்தெடுத்தல் வேண்டும். இங்கு பாடநூல்களும் துளையிட்டுப் பயிற்சி வழங்கலும் இடம் பெறமாட்டா. ஆடலும் பாடலும் அபிநயமும் கூடலும், மகிழலும் இடம்பெறும். பல வண்ண நூல்கள், கட்டைகள், சட்டங்கள், சக்கரங்கள் என்பவற்றைக் கையாள்வதன் வாயிலாகவும், விளையாடுவதன் வாயிலாகவும், மாணவர் கற்றுக் கொள்ளுகின்றனர். மொன்ரிசோரி முறையும் குழந்தைகள் பூங்கா முறைபோன்று முன்பள்ளிகளுக்கும் தொடக்கப் பள்ளிகளுக்குமுரிய கற்பித்தல் முறையாகும். பிள்ளைகளின் கற்றல் நாட்டம் வெளிப்படுவதற்குரிய விளையாட்டுக்களும் பணிகளும் வழங்கப்படல் வேண்டுமென்பது மொன்ரிசோரி அம்மையாரின் கருத்து. புலன் பயிற்சி, தசைநார் இயக்கங்களுக்கு இடமளித்தல், இயக்கங்களுக்குரிய பொருத்தமான கருவிகள் மாணவரால் பயன்படுத்தப்படுகின்றனவா என்பதை அறிதல், பிள்ளைகள் விரும்பும் சூழலை அமைத்தல் முதலியவை மொன்ரிசோரி முறையியலிற் சிறப்பிடம் பெறுகின்றன.

கால்ட்வெல் குக் என்பவர் விளையாட்டு வழியைக் கற்பித்தலில் அறிமுகம் செய்தார்.

கடினமான கற்றற் பணிகளை மகிழ்வுடன் செய்வதற்கு ஆக்கப்பெற்ற ஓர் உபாயமாக இந்த முறை விளங்குகின்றது. பிள்ளைகள் தாம் செய்யும் செயலில் ஆழ்ந்த கவனத்தை உருவாக்க இந்த முறையியல் துணை செய்கின்றது. கற்றல் அலகுகளை விளையாட்டு வழியில் இணைப்பற்குரிய படைப்பாற்றல் உள்ள ஆசிரியர் விளையாட்டு வழியைச் சிறப்பாகப் பயன்படுத்த முடியும்.

தற்காலத்தில் விளையாட்டுவழிக் கற்பித்தலுக்கு விரிந்த பொருள் தரப்படுகின்றது. சொல்லாடல், நடித்தல் கண்டு பாவனை செய்தல் முதலியவை விளையாட்டுவழிக் கற்பித்தலில் இடம்பெறுகின்றன.

டூயியின் பயன்கொள்வாதச் சிந்தனைகளுடன் இணைந்த கற்பித்தல் முறையியலாக பிரச்சினை விடுவித்தல் இடம்பெறுகின்றது. வாழ்க்கையில் ஒவ்வொருவரும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருத்தலும், பல்வேறு முரண்பாடுகளை அடியொற்றிப் பிரச்சினைகள் தோன்றிய வண்ணமிருத்தலும் கல்வியியலாளரின் கவனத்தைப் பெறுகின்றன. பிரச்சினை விடுவித்தல் தெறிசிந்தனையுடன் இணைந்தது. பிரச்சினையை அறிய, ஆழ்ந்து விளங்கிக்கொள்ள, தீர்வுகளை ஒழுங்கமைக்க, காரண காரிய அடிப்படையிற் தொழிற்பட, தெறிசிந்தனை வழி அமைக்கின்றது. பிரச்சினைகளையும் அவற்றுக்குரிய தீர்வுகளைத் திட்டமிட்ட சிந்தனையின் வழியாகவும் அறிய முடியும் அல்லது முயன்று

தவறியும் அறிய முடியும். திட்டமிட்ட வகையிலே தீர்வுகாணும் உபாயங்களையே மாணவரிடத்து விருத்தி செய்தல் வேண்டும். முயன்று தவறிப் பிரச்சினைக்குத் தீர்வுகாணல் சிக்கனமும் வினைத்திறனுமற்ற கற்பித்தல் முறையாகும்.

பிரச்சினை விடுவித்தற் கற்பித்தல் முறையிற் பிரச்சினையின் உள்ளீடாக அமையும் விதிகளையும், சார்பு நிலைகளையும் மாணவர் அறிந்து கொள்கின்றனர். பிரச்சினை விடுவித்தலுக்குரிய தருக்க முறைமைகளாக விதிவருவித்தல், விதி விளக்குதல் ஆகியவை இடம்பெறும். மேலும் பிரச்சினைகள் பற்றிய நிறைவான விளக்கங்களைப் பெற இயற்கை சமூகம் ஆகியவற்றின் இயங்கியல் விதிகளை மாணவர் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.

செயல் திட்டமுறையும் நவீன கற்பித்தல் உபாயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. பிரச்சினைகளை உள்ளடக்கிய செயல்களை யதார்த்தமான சூழலிற் செய்து நிறைவேற்றுவதே செயல்திட்டம் எனப்படும். ஒரு செயலின் இலக்குகள், அதனை நிறைவேற்றுவதற்குரிய திட்டமிடல், அதில் ஈடுபடுவோருக்குக் கிடைக்கும் ஊக்கல்கள் என்பவற்றைச் செயல்திட்டம் உள்ளடக்கும். கற்றலை முதல் நிலையாகக் கொண்டவை, மகிழ்ச்சியை இலக்காகக் கொண்டவை, நிருமாணத்தை நோக்காகக் கொண்டவை, பிரச்சினைகளை அணுகி நிற்பவை என்று செயல்

திட்டங்களை வகைப்படுத்தலாம். தேவைக்கேற்ற வாறு மேற்கூறிய செயல் திட்டங்களைப் பயன் படுத்த முடியும். தனி மாணவனுக்குரிய செயல் திட்டங்களை வழங்கலாம்; குழு நிலையிலும் செயல் திட்டங்களைக் கொடுக்கலாம். ஆய்வு களின்படி, குழுநிலையில் வழங்கப்பட்ட செயல் திட்டங்களே கூடிய வினைத்திறன் கொண்டிருந் தமை புலப்பட்டது.

தற்காலக் கற்பித்தலில் அனைத்து முறை களையும் ஒன்றிணைக்கும் அகல்விரி திட்டமே சிறந்ததெனக் கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினூடாக மாணவர்கள் தாமே கண்டறிந்து கற்றலே விரும்பப்படுகின்றது. பொறிகளும் கணனிகளும் தாமே கண்டறியும் கற்றலை வளம்படுத்தும் வகையில் ஒழுங்கமைக் கப்படல் வேண்டும். சிக்கலடைந்துள்ள அறிவுத் தொகுதியை ஒழுங்கமைத்து வரன்முறைப் படுத்தி வழங்க வேண்டும்.

அளவீடும் மதிப்பீடும்:

ஆசிரியர் தமது பணிகளை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு அளவீடும் மதிப்பீடும் தொடர்பான உபாயங்களை அறிந்திருத்தலும் தவிர்க்கமுடியாது வேண்டப்படுகின்றன. அள வீட்டுக்கும் மதிப்பீட்டுக்குமிடையே நுண்ணிய வேறுபாடு உண்டு. அளவீடு திட்டவட்டமான

எண் பெறுமானங்களைக் கொண்டது. மதிப்பீடு என்பது குறித்த எண் பெறுமானங்களைக் கொண்டு பண்புநிலையான கருத்துக்களை உருவாக்குதலாகும். இவையிரண்டும் கல்வி தொடர்பான இலக்குகள் குறிக்கோள்கள் என்பவற்றைக் கொண்டே ஆக்கப்பெறுகின்றன. மாணவரின் சிந்தனையிலும் நடத்தையிலும் திட்டமிட்ட மாற்றங்களை ஏற்படுத்தலே கல்வியின் இலக்குகளாக இடம்பெறுகின்றன.

கலைத்திட்டத்தில் இடம்பெறும் ஒவ்வொரு பாடப்பொருளும் குறிப்பிட்ட சிந்தனைப்பாங்கு, கருத்தியல், திறன்கள், கவர்ச்சிகள், மனப்பாங்குகள் என்பவற்றை வளர்க்கின்றன. குறிப்பிட்ட இலக்குகளை மாணவர் அடைந்துள்ளனரா என்பதை அறிந்து கொள்வதற்கு அளவீடும் மதிப்பீடும் ஆசிரியருக்குப் பயன்படுகின்றன. இந்நிலையில் ஓர் ஆசிரியர் தன்னைப்பற்றிய விமர்சனத்தைத் தானே செய்து கொள்வதற்கும் தனது கற்பித்தல் உபாயங்கள் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன என்று கண்டு கொள்வற்கும், அளவீடும் மதிப்பீடும் பயன்படுகின்றன.

அறிதல் ஆட்சி, எழுச்சி ஆட்சி, உள இயக்க ஆட்சி என்றவாறு கல்வி இலக்குகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இந்த ஆட்சிகளை ஆசிரியர் மேலும் விரிவுபடுத்தல் வேண்டும். சமூகம் பற்றிய உணர்வு மாணவனுக்கு எவ்வளவு தூரம் ஏற்பட்டுள்ளது, பயனுள்ள ஒரு சமூகப்

பிரசையாக அவன் மாற்றப்பட்டுள்ளானு என்பது கல்வி இலக்கிலும் மதிப்பீட்டிலும் இடம்பெறல் வேண்டும். இந்தப் பண்புகளுக்கு அழுத்தங் கொடுக்கப்படாமையின் அவலங்களை இன்றைய யதார்த்த வாழ்விலே காண முடிகின்றது.

மாணவனை மதிப்பீடு செய்வதற்குரிய தேர்வுகள் தனியாளை அடிப்படையாகக் கொண்டதாகவோ அல்லது குழுக்களை அடிப்படையாகக் கொண்டதாகவோ அமையலாம். தேர்வுகளுக்கு மாணவரை உரிய முறையில் நெறிப்படுத்துவதோடு, தேர்வின் வாயிலாக எழும் உளவியல் நெருக்கடிகளில் இருந்து மாணவர்க்குப் பாதுகாப்பு வழங்கல் வேண்டும்.

சிறந்த மதிப்பீட்டு முறைகள் தகுதி அல்லது பெறுமதியுடமை, நம்பகம், புறவயத்தன்மை, பயனுடமை, நியமங்களுடனான இணைப்பு, சமூக மேம்பாட்டு இலக்கு ஆகியவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும். குறித்த ஒரு திறனை மதிப்பீடு செய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு பரீட்சை அதே பண்பினைத் திட்டவட்டமாக அளவிடுதற்குத் துணைசெய்யுமாயின் அதுவே தகுதி அல்லது பெறுமதியுடமை எனப்படும். குறித்த மாணவர் தொகுதியின்மீது எத்தனை முறை ஒரு சோதனையைப் பயன்படுத்தினாலும் அவற்றின் முடிவுகளுக்கிடையே முரண்பாடுகள் காணப்படாவிடில் அதனை நம்பகம் என்பர்.

ஒரு சோதனை எளிதாகவும், சிக்கன வயப்பட்டும் இருக்குமாயின் அதனை பயனுடமை என்பர். சோதனையை அதே வயதுத்தரங்கள், வகுப்புத்தரங்கள், சமூக பொருளாதாரத் தரங்கள், தேசியதரங்கள் போன்றவற்றுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் பிற நியமங்களுடனான இணைப்பு என்று கருதப்படும். ''சோதனை சோதனைக்காக'' என்ற குறுகிய இலக்கினை மாற்றி அமைத்து அதனைச் சமூக மேம்பாட்டுக்கான சாதனமாக வடிவமைத்தல் வேண்டும், அநீதி யான சமூக அமைப்பிற் சுரண்டலுக்குள்ளாகி நொந்த மாணவரது நம்பிக்கைகளைக் குலைத்து விடும் பரீட்சை முறையும் மதிப்பெண்களும், அடைவுச் சுட்டிகளும் விமர்சனம் செய்யப்பட வேண்டியுள்ளன.

அறிவுரையும் வழிகாட்டலும் :

மாணவர் எதிர்நோக்கும் பல்வகையான பிரச்சினைகளுக்கு நண்பனாயும் நல்லாசிரியராயும் நின்று அறிவுரை பகர்தலும் வழிகாட்டலும் இன்றைய தேவைகளாகவுள்ளன. மாணவரது ஆற்றல், விருப்பம், கவர்ச்சி, இசைவாக்கம், என்பவற்றை அறிந்து எதிர்கால வாழ்க்கைக்கு நல்லாற்றுப்படுத்தல், வழிகாட்டல் எனப்படும். சிக்கல் நிரம்பிய சமூகத் தொழிற்பாடுகள், கல்விச் செயல் முறைகள் என்பவற்றுக்கிடையே

அலைபட்டு நிற்கும் மாணவனுக்கு வழிகாட்டுதல் ஆறுதலையும், அமைதியையும் நம்பிக்கையையும் கொடுக்கின்றது.

கல்விக்கு வழிகாட்டல், தொழிலைத்தெரிந் தெடுப்பதற்கு வழிகாட்டல், சமூகப்பண்பின னுவதற்கு வழிகாட்டல் என்றவாறு வழிகாட்டலை வகைப்படுத்தலாம். ஒரு மாணவனுக்குத் தனியாக வழிகாட்டலை வழங்க முடியும். அல்லது ஒரு குழுவுக்கு வழிகாட்ட முடியும்.

கல்விக்கு வழிகாட்டல் என்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. கற்றலில் மாணவர் எதிர்நோக்கும் இடர்களை எவ்வாறு முறியடிப்பது, எத்தகைய பாடங்களை உயர் கல்விக்குத் தெரிவு செய்வது, ஆக்கத் திறன்களுக்குரிய களத்தை எவ்வாறு தெரிவு செய்வது, ஆகியவை கல்விக்கு வழிகாட்டலிற் சிறப்பிடம் பெறுகின்றன. இத் தகைய வழிகாட்டலில் மாணவன் பற்றிய நெடுங் கோட்டு முறை ஆய்வு, குறுக்குமுக ஒப்பீடுகள், திரள் பதிவேடுகள், சோதனை அடைவுகள், ஆக்க வெளிப்பாடுகள் முதலியவற்றை ஆசிரியர் பரிசீலனை செய்தல் வேண்டும்.

தொழிலுக்கு வழிகாட்டலில் தொழில் நாட்டங்களை அறியக்கூடிய பொருத்தமான உள வியற்சோதனை, தொழில்களைத் தரப்படுத்தவும் வகைப்படுத்தவும்வல்ல அறிவு, தொழில்கள் உட்கொள்ளத்தக்க மனிதவலு ஆகியவை பற்றிய தெளிந்த அறிவு அவசியம். தொழிலுக்கு வழிகாட்டலில் இரண்டு வழிகள் உள்ளன. ஒன்று

அறிவுரை வழங்குநரை அல்லது ஆலோசனை தருபவரை மத்தியாகக் கொண்ட முறை. இது பணிப்புரை அணுகுமுறையென்றும் கூறப்படும். அதாவது இம்முறையில் ஆலோசனை தருபவரின் விதப்புரையே பிரதான தீர்மானிப்பு வலுவாக விளங்குகின்றது. இரண்டாவது முறை அறிவுரை பெறுபவனை மத்தியாகக் கொண்டது. இதனைப் பணிப்புரை வழங்கா அணுகுமுறை என்றும் கூறுவர். ஒருவன் தானே சுயமாகச் சிந்தித்து தீர்மானம் இயற்றக்கூடிய இங்கிதமான சூழலை அமைத்துக் கொடுத்தலும், போதுமான தகவல்களை வழங்குதலும், யதார்த்தத்தைக் கூறுதலும், அறிவை வழங்குபவரது கடமையாகின்றது. இங்கு அறிவுரை வழங்குபவரது கருத்தேற்றத்துக்கும் திணிப்புக்கும் இடமளிக்கப்படுவதில்லை.

யதார்த்த நிலையிற் சிந்திக்கும்பொழுது எமது மாணவர்களின் தொழில் நிலைப்பட்ட தெரிவிலே பெற்றோரின் அதீத தலையீடுகளும் குடும்ப அழுத்தங்களும் பெருமளவு செல்வாக்கைச் செலுத்துகின்றன.

முழுநிறைவான வளர்ச்சியை நோக்கி...

மாணவரது ஆளுமையை முழுநிறைவாக வளர்ப்பதை உறுதி செய்வதில் உளவியலும் ஆசிரியத்துவமும் பங்குகொள்ள வேண்டியுள்ளன. ஆளுமை என்பது பல்வேறு பண்புக்கூறுகளைக் கொண்ட ஒன்றிணைந்த முழுமையினை

விளக்கும் ஓர் எண்ணக்கருவாகும். அறிவுசார் நடத்தைகள், எழுச்சிசார் நடத்தைகள், மனோ பாவங்கள் அனுபவங்கள், பழக்கவழக்கங்கள், பற்றுக்கள், அழகுணர்திறன் என்ற பல்வேறு பண்புகளின் அடிப்படையில் ஒருவனிடத்துக் காணப்படும் தனித்துவமாகிய ஆளுமை முழு நிறைவாக வளர்த்தெடுக்கப்படல் வேண்டும். ஆளுமைப் பண்புக்கூறுகளில் யாதாயினும் ஒரு சில பண்புகள் வளர்தலும் வேறு சில பண்புகள் மழுங்கடிக்கப்படுதலும் பொருத்தமான நடவடிக்கைகளாக மாட்டாது. ஆளுமையின் ஒருங்கிணைக்கப்பட்ட பண்புக் கூறுகளை வளர்ப் பதையே நவீன கல்வி தனக்குரிய தலைமைப் பணியாகக் கொள்ளுகின்றது.

எல்லாரும் கற்கும்திறன் உடையவர்கள். கற்கமுடியாத மாந்தர் எவருமிலர். அறிவிலே தனியுரிமைக்கு இடமில்லை. எந்தப் பாடநெறி யையும் யாருக்கும் கற்பிக்கலாம். அறிவு என்பது பொதுச் செல்வம். எல்லோரும் அதனை நுகர் வதற்கு அடிப்படை உரிமை கொண்டவர்கள். அறிவின் பரிமாணங்களை வளர்ப்பதில் யாரும் பங்கு கொள்ள முடியும்.

அறிவுக்கும் அறியாமைக்கும் இடையில் உள்ள முரண்பாடு நிரந்தரமான முரண்பாடா கும். அறியாமை இருப்பதனால் அறிவு இருக் கின்றது. எதிரெதிரான இந்தத் துருவங்கள் நித்தியமான இயக்கத்தை ஏற்படுத்துகின்றன.

References:

1. **LUCIEN SEVE,**
Marxism and The Theory of Human Personality, Lawrence and Wishart, London - 1968.

2. **RICHARD A. KALISH,**
The Psychology of Human Behaviour, Brooks Cole Publishing Co. Belmount - 1969.

3. **DAVID FONTANA,**
Psychology for Teachers, Macmillan, London - 1981

4. **N. L. GAGE AND DAVID C BERLINER,**
Educational Phychology, Houghton Mifflin, Boston - 1984